**செய்தி வெளியீடு எண்:594** **நாள் :24.11.2015**

**செய்தி வெளியீடு**

**23.11.2015** திங்கள் கிழமையன்று மாலை முதல் இரவு வரை சென்னையில் பெய்த கனமழையினால் சாலைகளில் தண்ணீர் அதிகமாகி பேருந்து மற்றும் பிற வாகனங்கள் மிக மெதுவாக ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டது. மேலும் சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. ஆட்டோ, டாக்ஸி போன்ற வாகனங்கள் இயங்காததால் பயணிகள் அதிக எண்ணிக்கையில் பேருந்து நிறுத்தங்களில் காத்திருக்க நேர்ந்தது. இதன் காரணமாக சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் மாலை முதல் **3468** பேருந்துகளை பயணிகள் நலன் கருதி தொடர்ந்து இயக்கியது.

மேலும், இரவு **10.30**–க்கு மேலும் மழையினால் பேருந்து நிலையங்களில் பயணிகள் காத்திருந்தனர். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின்படி பயணிகள் நலன் கருதி சென்னை, CMBT, பிராட்வே, வள்ளலார் நகர் போன்ற முக்கிய பேருந்து நிலையங்களிலிருந்து மாநகர் போக்குவரத்து கழகம் **1200** பேருந்துகள் இரவு **10.30** மணி முதல் நள்ளிரவு **01.00** மணி வரை கூடுதலாக இயக்கப்பட்டு பயணிகள் பாதுகாப்பாக பயணம் செய்தனர்.

மேலாண் இயக்குநர்
மாநகர் போக்குவரத்துக் கழகம்,

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**